**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஜெயராஜன் | தொழில் : | |
| க.பெ/தபெ.: | ரெகுராமன் | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**9.1.2023 OS No. 26 /2022 வா.சா.1** ஜெயராஜன் **ஆஜர்**

**முதல் விசாரணை:**

1. நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். 17.12.1987ம் தேதியிட்டு என் அப்பா, என் மாமனார், என் தாத்தாவிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்ற கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**2.** தாவா சொத்திற்கான யுடிஆர் ”அ” பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(யுடிஆர் ”அ” பதிவேடு வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்திற்கான என் பெயரிலுள்ள பட்டா கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்திற்கான ”அ” பதிவேடு கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(”அ” பதிவேடு வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3. 6**.7.2022ம் தேதியிட்ட வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்திற்கான புல வரைபடம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(புல வரைபடம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா 2ம் லக்க சொத்திற்கான புகைப்படங்கள் (5 எண்ணம்) குறுந்தகடுடன் தாக்கல் செய்கிறேன். **(புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு வா.சா.ஆ.7 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நான் என் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீதுகளுடன் தாக்கல் செய்கிறேன். **(அறிவிப்பு வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. 3ம் பிரதிவாதி மற்றும் அவர்வகை ஆட்கள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் 4 எண்ணம் தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ.9 வரிசை (4எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 3ம் பிரதிவாதி வகையறா அனுப்பிய பதில் அறிவிப்பு அசல்

தாக்கல் செய்கிறேன். **(பதில் அறிவிப்பு வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.